முருகப்பெருமான் துணை

**மகான் பட்டினத்தார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.10.2021, சனிக்கிழமை

1. அறமாக நின்றருளும் ஐயனே
ஆற்றல்பட மக்களை மீட்டிட
வரமாக தந்தருளும் அரங்கனே
வல்லமைமிக்க உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசி தன்னை
குறைவிலா பிலவ தரிவை திங்கள்
தெரிவிக்க மூவையோர் திகதி காரிவாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 16ம் நாள், 02.10.2021 சனிக்கிழமை)
தேசிகனுக்கு பட்டினத்தார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர் கொலை தவிர்த்து தயவான
ஞான வழி காட்டும் அரங்கன்
நம்பிக்கை தரும் மார்க்கம் தன்னை
4. தன்னையே உலகமக்கள் தானும்
தவமாக ஏற்று வருக
அண்ணலே என வணங்கி இனிதே
ஆதரவு தந்து தொடரவே
5. தொடரவே உலகினில் சைவநெறி
தெய்வ நெறியாகப் பரவியே
இடரில்லாத ஞான பூமியாக
இந்த உலகம் ஆற்றல் பெறும்
6. ஆற்றல் தரும் மகா சக்தியாக
அருளை தரும் யோக சக்தியாக
மாற்றம் தரும் மா தவசியாக
மண்ணுலகில் அவதாரம் புரிந்த ஞானி
7. ஞானி அரங்கன் சொல் செயல்
ஞானயுகம் படைக்க வல்ல
ஞானமாகப் பரவி சிறக்கும்
ஞாலமதில் இந்த நல் அவதாரம்
8. நல் அவதாரம் அறியப் படும்படி
ஞானிகள் வெளிப்பாடு பெருகிட
வல்லமை பெற உலக மக்கள்
வழிபாட்டை செய்து வருக

9. வருகவே நிலைமைகள் மாறி
வாழும் காலமே தெளிவு கண்டு
முருகப் பெருமான் தருகின்ற
முழுமை ஞானம் அடைதல் கண்டு

10. கண்டுமே ஞானவான்கள் படை
கலியுகம் தன்னில் நிரம்பி
தொண்டுவழி உலக மாற்றம்
தொண்டர்களை கொண்டு நடத்தி

11. நடத்தியே ஞான ஆட்சியை
நாட்டிட பேருலகம் அடையும்
இடரின்றி உலகமக்கள் எல்லாம்
இணைந்து வர மாற்றம் காணும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–